OS 83/2024

வா.சா.2 ஜெயசந்திரன் த/பெ ஆரிமுத்து

நாள் 07.04.2026

**குறுக்கு விசாரணை**

1. எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் 8ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். எனது முதன்மை வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை வழக்கறிஞரிடம் யார் சொன்னது என்றால் வாதி சிவராஜ் சொன்னார். வாதி மற்றும் பிரதிவாதிகளை நன்கு தெரியும் என்று சொல்லியிருக்கிறேன் ஆனால் எந்த வகையில் தெரியும் என்பதை முதன்மை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் யாருடைய வீட்டில் கடனுறுதி சீட்டு எழுதி கொடுக்கப்பட்டது என்ற விவரம் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளை பாண்டில் கையொப்பம் செய்ததை சிவராஜ் பார்த்ததாக விவரம் முதன்மை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் கையொப்பம் செய்ததை விநாயகம் பார்த்ததாக முதன்மை வாக்குமூலத்தில் விவரம் சொல்லவில்லை என்றால் சரிதான். பாண்டை முருகன் என்பவர் எழுதியதாக பிரதிவாதிகள் தெரிவித்தார்கள் என்று முதன்மை வாக்குமூலத்தில் கூறியிருக்கிறேன் குறிப்பாக யாரிடம் சொன்னார்கள் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. யாருடைய வீட்டில் வைத்து சாட்சி கையொப்பம் செய்தேன் என்ற விவரத்தை எனது முதன்மை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் முதன்மை வாக்குமூலத்தில் சொல்லவில்லை ஆனால் முத்து வீட்டில் போட்டேன். முத்து வீட்டில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா பாண்டை எழுதியதை நான் நேரில் பார்த்தேனா என்றால் பார்த்தேன். வாதி மற்றும் சாட்சி விநாயகமும் பாண்டை எழுதியதை நேரில் பார்த்தாரா என்றால் பார்த்தார். வாதி பாண்டை எழுதியதை பார்க்கவில்லை என்று கூறியுள்ள நிலையில் பாண்டு எழுதியதை வாதி பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா பாண்டில் என்னுடைய கையொப்பத்திற்கு கீழே தமிழில் எழுதியுள்ள விவரங்கள் பாண்டை எழுதியதாக சொல்லப்படும் முருகன் என்ற நபர் எழுதினார். அதே போல் சாட்சி விநாயகம் கீழே உள்ள விவரங்களை பாண்டை எழுதியவர் தான் எழுதினார். வாதி சிவராஜ் பிரதிவாதிகள் முத்து மற்றும் விநாயகத்தை பார்த்ததே இல்லை என்றால் சரியல்ல தெரிந்திருக்கும்.

3. கார்த்திகேயன் என்பவர் பொய்யான பாண்டை தயார் செய்து வாதி சிவராஜ், என்னையும் சாட்சி விநாயகத்தையும் பயன்படுத்தி பொய்யான தாவா தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரியல்ல. எந்த காலத்திலும் பிரதிவாதிகள் வாதியிடம் கடன் வாங்கவில்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் தாவா பாண்டை பிரதிவாதிகள் எழுதி கொடுத்திருக்கிறார்கள் என்றாலும் சரியல்ல. தாவா பாண்டில் உள்ள கையொப்பத்தை முத்து மற்றும் சத்தியாவின் கையொப்பங்கள் இல்லை என்றால் சரியல்ல. தயார் செய்யப்பட்ட பாண்டு என்பதால் தான் யார் வீட்டில் வைத்து பாண்டு எழுதப்பட்டது என்ற விவரம் என்னால் சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல. சிவராஜ் பெயிண்ட் அடிக்கும் கூலி வேலை செய்யும்

நபர் என்றாலும் ரூ.7,50,000/- கடன் கொடுப்பதற்கு வசதி வாய்ப்பு இல்லாத நபர் என்றாலும் சரியல்ல.

4. பொதுவாக கடன் வாங்குபவர்கள் கடன் கொடுப்பவரின் வீட்டிற்கு சென்று தான் கடனுறுதி சீட்டை எழுதி கொடுப்பார்கள் என்றாலும் வாதி சிவராஜ் செஞ்சியை சார்ந்தவர்கள் என்றாலும் இராட்டிணமங்கலம் கிராமத்தில் பாண்டு எழுதி இருப்பது பொய்யான விவரம் என்றாலும் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.